# இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்கள்

# 2021

இழப்பீடுகளுக்கான அலுவலகத்தினால் 2018 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க இழப்பீட்டுச் சட்டத்தின் பிரிவு 2 (01) மற்றும் பிரிவு II (1) (ஓ) ன் வாசிப்பிற்கும் அமைச்சரவையின் அனுமதிக்கும் இணங்க உருவாக்கப்பட்டது.

# உள்ளடக்க அட்டவணை

## அறிமுகம்

இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் 2018 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க இழப்பீட்டுச் சட்டம்.

இழப்பீட்டு நிவாரணங்களை வழங்குவது தொடர்பான அரச கொள்கை.

2018 ஆம் ஆண்டின் இழப்பீடுகளுக்கான சட்டத்தின் அடிப்படையில் இழப்பீட்டுக் கொள்கைகளை உருவாக்குதல்.

## சட்ட விதிமுறைகள்

## கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களை வடிவமைப்பதில் பின்பற்றப்பட்ட செயல்முறை

## கொள்கைகள்

1. வாழ்வாதார உதவிகள்.
2. நட்ஈட்டுக் கொடுப்பனவுகளும் நிதியுதவிகளும்.
3. காணி உரிமைகளை மீட்டெடுத்தல்.
4. வீட்டுவசதியினை வழங்குதல்.
5. சமுக உட்கட்டமைப்பின் அபிவித்தி.
6. நிர்வாகம் சார்ந்த நிவாரணம்.
7. உள-சமூக ஆதரவு.
8. மேம்பட்ட ஒற்றுமை, நல்லிணக்கம் மற்றும் வன்முறைகள் மீளநிகழாமைக்கான நடவடிக்கைகள்.

## வழிகாட்டுதல்கள்

1. பாதிக்கப்பட்டோரை மையமாகக் கொள்ளல்.
2. இழப்பீடுகள் வழங்கப்படக்கூடிய பாதிப்பின் தன்மை மற்றும் தீவிரத்தன்மை தொடர்பான அளவுகோல்கள் உட்பட, இன்னலுக்குள்ளான நபர்கள் இழப்பீடுகளைப் பெறுவதற்காக அவர்களுக்கு உரிய தகுதியினைத் தீர்மானிக்கும் அளவுகோல்கள்.
3. இழப்பீடுகளின் வடிவம் மற்றும் பொருத்தமான இடங்களில், தகுதியுள்ள பாதிக்கப்பட்ட நபர்களுக்கு வழங்கப்படும் இழப்பீடுகளின் அளவு.
4. இன்னலுக்குள்ளான நபர்களுக்கு நிதி சார்ந்த இழப்பீடுகளை வழங்குவதற்கான தகுதிகள்.
5. அவசரகால இழப்பீடுகளுகளைப் பெறுவதற்கான பாதிக்கப்பட்ட நபர்களின் தகுதிகளுக்கான அளவுகோல்கள்.
6. இன்னலுக்குள்ளான நபர்களுக்கு பல்வேறு வகையான இழப்பீடுகளை வழங்க அல்லது வழங்க உதவக்கூடிய அமைப்புகள்.
7. இழப்பீடுகளுக்கான சரிபார்க்கப்பட்ட விண்ணப்பங்களுக்கு எந்த அளவுகோல்களின் அடிப்படையில் முன்னுரிமை அளிக்கப்படும்.
8. நம்பகத்தன்மையை சரிபார்ப்பதற்கான அளவுகோல்கள்.
9. உயிரிழந்தோரை நினைவுகூருவதற்கான அளவுகோல்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள்.
10. இன்னலுக்குள்ளான நபர்களின் குறிப்பிட்ட குழுக்களின் சிறப்புத் தேவைகளை நிவர்த்தி செய்தல்.

# அறிமுகம்

**<u>2018 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க இழப்பீட்டுச் சட்டம்</u>**

2018 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க இழப்பீட்டுச் சட்டம் (''இழப்பீட்டுச் சட்டம்'') இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நாடாளுமன்றத்தால் 2018 அக்டோபரில் நிறைவேற்றப்பட்டு 2018 அக்டோபர் 22 முதல் நடைமுறைக்கு வந்தது. இழப்பீட்டுச் சட்டத்தின் முக்கிய குறிக்கோளாக அமைவது, குறிப்பிட்ட சூழ்நிலைகளில் குறைகளைச் சந்தித்த அதன் குடிமக்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படும் தீர்வுகள் அல்லது நிவாரணத்திற்கான ஒரு கட்டமைப்பை வகுப்பதுடன், அத்தகைய நபர்கள் தங்கள் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்பவும் மீட்டெடுக்கவும் உதவுவதும் ஆதரிப்பதும் ஆகும். இந்தச் சட்டத்தின் முன்னுரையில் வெளிப்படையாகக் குறிப்பிடப்பட்டுள்ளபடி, இழப்பீட்டுச் சட்டத்தின் பிரிவு 27 ன் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள குறிப்பிட்ட சூழ்நிலைகளில் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையின் அனைத்து குடிமக்களுக்கும் உதவுவதும், அவர்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கும் மீட்டெடுப்பதற்கும் இதன் மூலம் நல்வாழ்வை முன்னேற்றுவதற்கும் உதவுவதே இதன் நோக்கமாக உள்ளது. அத்துடன் எதிர்காலத் தலைமுறையினர் உட்பட அனைத்து இலங்கையர்களின் பாதுகாப்பினையும் நல்வாழ்வு மற்றும் நல்லிணக்கத்தினையும் மேம்படுத்துவதே இதன் இலக்காகும்.

இன்னலுக்குள்ளான நபர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கான ஒரு அரசின் கடமையானது எந்தவொரு தவறுக்கும் பொறுப்பை ஏற்பதனை அடிப்படையாகக் கொண்டதல்ல, மாறாக அதன் குடிமக்களைப் பாதுகாப்பதற்கான அரசின் கடமையை அடிப்படையாகக் கொண்டது, அரசியலமைப்பின் பிரிவு 12 (1) இன் கீழ் அனைத்து தனிநபர்களுக்கும் உத்தரவாதம் அளிக்கப்பட்ட சட்டத்தின் முன் சமமான பாதுகாப்பினை அடிப்படையாகக் கொண்டுள்ளது.) இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் முன்னுரை இழப்பீடுகளை வழங்குவதற்கான காரணத்தைப் பின்வருமாறு விளக்குகிறது:

> *''இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பு அனைத்து இலங்கையர்களின் உள்ளார்ந்த கௌரவத்தினையும் சமமான மற்றும் தவிர்க்கமுடியாத மனித உரிமைகளையும் அங்கீகரிக்கிறது. அத்துடன் இவ் உரிமைகளை மதித்தல், பாதுகாத்தல் மற்றும் முன்னேற்றுதல் அரசின் கடமை:*
>
> *அனைத்து இலங்கையர்களினதும் உரிமைகளின் ஒரு பயனுள்ள தீர்வாக தொகுக்கப்பட்டுள்ள விரிவானதொரு இழப்பீட்டுத் திட்டம், நல்வாழ்வுக்கான நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கும், எதிர்கால தலைமுறையினர் உட்பட அனைத்து இலங்கையர்களின் பாதுகாப்பிற்கும் பங்களிக்கும்: ''*

இழப்பீட்டுக்கான அலுவலகத்தின் ஆணை, நாட்டின் எந்தப் பகுதியிலும் வசிக்கும் அல்லது வாழ்ந்த அனைத்து 'இன்னல்களுக்குள்ளான நபர்களுக்கும்' நிவாரணம் வழங்குவதாகும்.

எனவே இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் பரிசீலிக்கப்படுட்டு வழங்கப்படும் நிவாரணமானது, ஒரு சமூகத்தின் மக்கள் அல்லது ஒரு குறிப்பிட்ட சம்பவம், சகாப்தம் அல்லது நாட்டின் குறித்தவொரு பிராந்தியத்திலும் பாதிக்கப்பட்டவர்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக மட்டும் வழங்கப்படுவதல்ல.

இந்த ஆணை கடந்தகாலக் குறைகளை மட்டுமல்லாமல், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய குறைகளையும் நிவர்த்தி செய்வதற்குமான ஏற்பாடுகளைச் செய்கிறது. இந்தச் சட்டத்தின் திட்டமானது, ஒருவர் வசிக்கும் இடம் அல்லது வேறு ஏதேனும் மாறுபட்ட காரணிகளைப் பொருட்படுத்தாமல், வேதனை அடைந்த அனைவருக்கும் சேவை செய்யவதற்கு இழப்பீடுகளுக்கான அலுவலகத்திற்குத் தெளிவாகக் கட்டளையிடுவதாகும்.

எனவே, இழப்பீடுகளுக்கான அலுவலகம் நாடு முழுவதும் இலங்கை மக்களுக்கு, வடக்கு முதல் தெற்கு, கிழக்கு, மேற்கு வரை சேவை செய்ய சட்டப்படி கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

சட்டத்தின் **பிரிவு 27** ஒரு **'இன்னலுக்குள்ளான நபர்'** குறித்து வரையறுப்பதாவது[1]

அ) "உயிர் இழப்பு அல்லது தமது நபர் அல்லது சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டதன் விளைவாக இழப்பினை எதிர்நோக்கிய நபர்கள்,

(i) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நடைபெற்ற ஆயுத மோதலின்போது, அதன் விளைவாக அல்லது அதனுடன் தொடர்புடைய, அல்லது அதன் பின்னரான;[2] அல்லது

(ii) அரசியல் அமைதியின்மை அல்லது குடியியல் குழப்பங்கள் காரணமாக ; அல்லது

(iii) இலங்கையிலுள்ள தனியாட்களின், குழுக்களின் அல்லது மக்கள் சமுதாயங்களினால் உறப்பட்ட

நீண்டகால மற்றும் பாரதூரமான தன்மையில் உள்ள அத்தகைய சேதம்; அல்லது

(iv) 2018 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதலிலிருந்து எல்லா ஆட்களையும் பாதுகாத்தல் பற்றிய சர்வதேசச் சமவாயச் சட்டத்தில் வரைவிலக்கணங்கள் கூறப்பட்டவாறு வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதலொன்றின் காரணமாக, உயிரிழப்பின் அல்லது அவர்களின் ஆட்களின் அல்லது ஆதனத்துக்கான சேதத்தின் விளைவாக சேதத்தை உற்றிருக்கின்ற ஆட்கள்;

ஆ). இறந்த நபரின் உறவினர்கள் அல்லது, மேற்கூறிய சூழ்நிலைகளில் காணமலாக்கப்பட்ட நபர் ஒருவர் . "உறவினர்கள்" என்ற சொலானது பின்வரும் நபர்களை உள்ளடக்கியதாக வரையறுக்கப்படுகிறது, இறந்த நபர் அல்லது காணாமலாக்கப்பட்ட நபரின் - மனைவி, குழந்தைகள், பெற்றோர், சகோதரர்கள் அல்லது சகோதரிகள், பெற்றோர்-மருமகள், சகோதரர்கள் / சகோதரிகள், மகன்கள் / மருமகள், பேரக்குழந்தைகள் மற்றும் தாத்தா பாட்டி.

---

[1] இந்த சட்டத்தின் பிரிவு 27 இழப்பீடு அலுவலகத்தின் சட்டமூலத்தின் அரசியலமைப்புத் தன்மை குறித்து 2018 ஜூலை 26 தேதியிட்ட உச்சநீதிமன்றத்தின் தீர்மானத்தின்படி வடிவமைக்கப்பட்டுள்ளது.-SC விண்ணப்ப எண் 19/2018 & 20/2018

[2] இந்த வரையறையில் மோதலின் விளைவாக பாதிக்கப்பட்ட அனைத்து நபர்களும் அத்தகைய தீங்கு அல்லது சேதம் ஏற்பட்டபோது அவர்கள் எந்த பிராந்தியத்தில் வாழ்ந்தார்கள் என்பது தொடர்பில் பொருட்படுத்தாமல். உள்ளடக்கப்படுவர், இவ் இன்னல்களுக்குள்ளான நபர்களில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்த நபர்கள் மட்டுமல்லாமல், அந்த மாகாணங்களுக்கு வெளியே வாழ்ந்தவர்களும், அரசாங்க பாதுகாப்புப் படையினர் மற்றும் காவல்துறையினர் உட்பட, மோதலின் விளைவாக தீங்கு / சேதம் என்பவற்றினை எதிர்நோக்கிய அனைவரும் அடங்குவர்.

## ஈடுசெய்யத்தக்க நிவாரணத்தினை வழங்குவது தொடர்பான அரசாங்கத்தின் கொள்கை

தமது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட நிகழ்வுகளின் விளைவாக நபர்களினால் எதிர்நோக்கப்படும் காயங்கள், சேதம் அல்லது இழப்பினை ஈடுசெய்வதற்கான நிவாரணம் வழங்கும் கொள்கையினை இலங்கை மிக நீண்ட காலமாக அங்கீகரித்துள்ளது. ஜூலை 1983 இல் நிகழ்ந்த நிகழ்வுகளுக்குப் பின்னர் இக் கொள்கை முதலில் அங்கீகரிக்கப்பட்டது. அக் காலப்பகுதியில் அரசத் தலையீட்டிற்கான தேவைப்பாட்டினைக் கருத்திற் கொண்டு,

சொத்துக்கள், வர்த்தகம் மற்றும் தொழில்களுக்கு ஏற்படும் சேதத்தினைச் சமாளிக்குமுகமாக அவசரகால விதிமுறைகளை அறிவிக்கும் பொருட்டு பொதுப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டங்கள் பயன்படுத்தப்பட்டன.

1983 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க[3] அவசரகால (பாதிக்கப்பட்ட சொத்து, கைத்தொழில்[4] அல்லது தொழில்களின் புனரமைத்தல்) விதிமுறைகளின் படி ஆட்கள் ஆதனங்கள் மற்றும் கைத்தொழில்களை புனர்வாழ்வு செய்யும் அதிகாரசபையினை'' (REPIA) ஸ்தாபிப்பதற்கான ஆணை வழங்கப்படதுடன் இதன் மூலம் பாதிக்கப்பட்ட ஆட்கள், ஆதனங்களின் நிலைமையினைச் சீர்செய்யவும் மீட்டெடுக்கவும் பாதிக்கப்பட்ட கைத்தொழில்களை புனரமைக்கவும் கட்டளையிடப்பட்டது.

1987 ஆம் ஆண்டில் ஆட்களுக்கான நிவாரணம் வழங்கப்பட்டது. 1987 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க ஆட்கள், ஆதனங்கள் மற்றும் கைத்தொழில்களைப் புனரமைப்புச் செய்யும் அதிகாரசபைச் சட்டம் (''சுநீஜயு சட்டம்'') இயற்றப்பட்டதன் மூலம், தனிநபர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காகவும், அத்துடன் சேதமடைந்த சொத்துக்களுக்காகான நிவாரணத்திற்காகவும் கொள்கையானது விரிவுபடுத்தப்பட்டது.

இந்த சட்டம் 2018 ஆம் ஆண்டு வரை நடைமுறையில் இருந்தது, அது இரத்துச் செய்யப்பட்டு அதற்கு பதிலாக மிகுந்த இலட்சிய நோக்குடன் அது தற்போதைய இழப்பீட்டுச் சட்டமாக மாற்றப்பட்டது. பயங்கரவாத வன்முறை, இனக் கலவரம் மற்றும் உள்நாட்டு அமைதியின்மை காரணமாக இன்னலுக்குள்ளாகி நஷ்டம் அல்லது சேததினை எதிர்நோக்கியவர்களுக்கு REPPIA சட்டத்தின் கீழ் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், அரசானது தொடர்ச்சியான நிகழ்வுகள் இயற்கை பேரழிவுகள் மற்றும் வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடுகளை பல சந்தர்ப்பங்களில் வழங்கியுள்ளன.

**இதற்கான மிகச் சமீபத்திய எடுத்துக்காட்டுகள்:** அலுத்கம மற்றும் திகானவில் நடந்த சம்பவங்களில் வீடுகளை இழந்தவர்களின் வீடுகளை மீண்டும் கட்டியெழுப்புதல் முன்னாள் டுவுவுநு உறுப்பினர்களில் மறுவாழ்வு மற்றும் மறு ஒருங்கிணைப்பு, ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதிசார்ந்த இழப்பீட்டினை வழங்குதல், சமீபத்திய காலங்களில் வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மனிதாபிமான நிவாரணம் வழங்குதல் போன்றவை.

[3] ஆகஸ்ட் 7, 1983 இன் வர்த்தமானி எண் 257/3 இல் வெளியிடப்பட்டது.

[4] ஒழுங்குமுறையின் 4 வது பிரிவு.

## 2018 ஆம் ஆண்டின் இழப்பீட்டுச் சட்டத்தின் அடிப்படையில் இழப்பீட்டு கொள்கைகளை உருவாக்குதல்.

இழப்பீட்டுச் சட்டத்தின் 2 (அ) மற்றும் 11 (1) (எ) பிரிவுகளுக்கு அமைய, இழப்பீட்டுகளுக்கான அலுவலகமானது, வேதனைக்குள்ளான நபர்களுக்குக்கான மானியம் தொடர்பாக தனிப்பட்ட மற்றும் கூட்டு இழப்பீடுகள் உள்ளடங்கலான “இழப்பீடுகள் மற்றும் வழிகாட்டுதல்கள் தொடர்பிலாக கொள்கைகள்” குறித்த பரிந்துரைகளை அமைச்சரவையின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்க வேண்டும்,

தனிப்பட்ட மற்றும் கூட்டு இழப்பீடுகள் தொடர்பில் பின்வருவன உள்ளடககப்படல் வேண்டும்:

(i) இழப்பீடுகளைப் பெறுவதற்கான இன்னலுக்குள்ளான நபர்களுக்கான அளவுகோல்களாவன, சேதத்தின் தன்மை மற்றும் அதன் தீவிரத்தன்மையின் அளவுகோலின் அடிப்படையில் கிடைக்கக்கூடிய இழப்பீடுகள் உட்பட

(ii) தகுதியான வேதனைக்குள்ளான நபர்களுக்கு வழங்கப்படக்கூடிய இழப்பீடுகள் பொருத்தமான இடங்களில் வழங்கப்படக்கூடிய வடிவம் மற்றும் அளவு

(iii) நித சார்ந்த இழப்பீடுகளுக்கான பாதிக்கப்பட்ட நபர்களின் தகுதிக்கான அளவுகோல்கள்

(iv) அவசரகால இழப்பீடுகளுக்காக இன்னலுக்குள்ளானவர்களின் தகுதிக்கான அளவுகோல்கள்

(v) இன்னலுக்குள்ளான நபர்களுக்கு பல்வேறு வகையான இழப்பீடுகளை வழங்க அல்லது வழங்குவதற்கு உதவக்கூடிய அமைப்புகளின் பட்டியல்

(எ) இன்னலுக்குள்ளான நபர்களுக்கு பல்வேறு வகையான இழப்பீடுகளை வழங்க அல்லது வழங்க உதவக்கூடிய அமைப்புகளின் பட்டியல்

(vii) சரிபார்க்கப்பட்ட இழப்பீடுகளுக்கான விண்ணப்பங்கள் எந்த அளவுகோல்களின் அடிப்படையில் முன்னுரிமை அளிக்கப்படும்.

## சட்ட விதிமுறைகள்

இக் கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களை வகுப்பது தொடர்பர்பில், இழப்பீகளுக்கான அலுவலகத்தின் உறுப்பினர்கள் சட்டத்தில் உள்ள பொருந்தக்கூடிய சட்டரீதியான விதிகளினால் வழிநடத்தப்படுகிறார்கள். இவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :

சட்டத்தின் **பிரிவு 2 இல்**, சட்டத்தின் நோக்கங்களாக அமையக்கூடியன -

(அ) இன்னலுக்குள்ளான நபர்களுக்கு தனிநபர் மற்றும் கூட்டு இழப்பீடுகளை வழங்குவதற்காக இழப்பீடு தொடர்பான கொள்கைகளை வகுத்தல் மற்றும அவற்றை அமைச்சரவைக்குப் பரிந்துரைத்தல்.

(ஆ) பொதுக் கல்வி, நினைவுகூரல் மற்றும் குழந்தைகள், இளைஞர்கள், பெண்கள், பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் தொடர்பான சிறப்புக் கொள்கைகள் உள்ளிட்ட அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட இழப்பீடுகள் தொடர்பான கொள்கைகளை எளிதாக்குவதற்கும் செயல்படுத்துவதற்கும்.

(இ) நல்லிணக்கத்தை இலக்காகக்கொண்ட வேறு பொறிமுறைகளுடன், இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் ஒத்தியல்பை உறுதிப்படுத்துவதற்கான இணைப்புக்களைத் தாபித்தல்; அத்துடன்

(ஈ) தகவுடைய இன்னலுற்ற ஆட்களுக்கு இழப்புக்கான எதிரீடுகள் வழங்கப்பபடுவதன் முன்னேற்றத்தினைக் கண்காணித்தலும் மதிப்பீடுசெய்தலும்.

எனவே, இழப்பீட்டுச் சட்டம், சட்டத்தின் கீழ் கருதப்பட்ட நிவாரணத்தை சம்பந்தப்பட்ட இணை அமைச்சுகள் அல்லது அரச / நகராட்சித் திணைக்களங்கள் அல்லது ஏனைய குறிப்பிட்ட விடயங்களுக்குப் பொறுப்பான அதிகாரிகள் மூலம் வழங்க வேண்டும் என்பதனைக் கருத்திற் கொண்டு இயங்குகிறது.

இழப்பீட்டுக்கான அலுவலகத்தின் பணியாவது, அமைச்சரவையின் ஒப்புதலுக்காக இழப்பீட்டுக் கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களைப் பரிந்துரைப்பது, மற்றும் அமைச்சரவையால் அனுமதி வழங்கப்பட்டதன் பின்னர், தனிநபர் மற்றும் கூட்டு இழப்பீடுகளை வழங்குவதற்காக அதற்குப் பொறுப்பான அரசு அல்லது நகராட்சி அதிகாரிகள் மற்றும் பிரதேச அல்லது மாவட்ட செயலகங்கள் மூலம் இன்னலுக்குள்ளானவர்களுக்கு இழப்பீடுகள் வழங்கப்படுவது, இழப்பீடுகளை வழங்குவது தொடர்பிலான முன்னேற்றத்தினைக் கண்காணித்தலும் மதிப்பீடு செய்தலுமாகும்.

இழப்பீட்டுச் சட்டத்தின் விதிகளின் அடிப்படையில், இழப்பீடு வழங்குவதற்கான அலுவலகத்திற்கு விசாரணை அல்லது நீதித்துறை செயல்பாடுகளை நிகழ்த்துவதற்காக அதிகாரம் வழங்கப்படவில்லை மற்றும் எந்தவொரு நபரின் தவறுகளையும் விசாரிக்கவும் அதிகாரத்தினைக் கொண்டிருக்கவில்லை. அமைச்சரவை ஒப்புதலுக்கான கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களை வகுத்தல்இதன் “சட்டரீதியான பணியாகும். அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளின் கீழ் இழப்பீடுகளைப் பெறுவதற்கான விண்ணப்பதாரர்களின் தகுதியை மதிப்பிடுதல் மற்றும் அனுமதிக்கப்பட்ட கொள்கைகளுக்கிணங்க பொருத்தமான நபர்களுக்கு பொருத்தமான தனிநபர் அல்லது கூட்டு இழப்பீடுகளை வழங்குதல்.

சுநீஜயு மற்றும் இழப்பீட்டு அலுவலகத்தின் செயல்பாடுகளுக்கு இடையிலான குறிப்பிடத்தக்க வேறுபாடு என்னவென்றால், குறிப்பிட்ட சூழ்நிலைகளில் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு நிதி இழப்பீடுகளை REPPIA வழங்கியிருந்தாலும், குறித்த சில சம்பவங்கள் நிகழ்ந்தபோது அமைச்சரவை எடுத்த தற்காலிக முடிவுகளுக்கு இணங்க, இழப்பீட்டுச் சட்டமானது, இழப்பீட்டுத் தொகையை, நிதிசார் இழப்பீட்டிற்கும் அப்பால், ஓர் ஒருங்கிணைந்த கொள்கை மற்றும் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட தெளிவான வழிகாட்டுதல்களின் அடிப்படையில், தனிப்பட்ட மற்றும் கூட்டு இழப்பீடுகளை வழங்குவதற்கான அலுவலகத்தை வழங்குகிறது.

இழப்பீடுகளின் பரந்த நோக்கமானது ‘‘தனிப்பட்ட இழப்பீடுகள்” மற்றும் ‘‘கூட்டு இழப்பீடுகள்” ஆகியவற்றின் வரையறைகளில் பின்வருமாறு அமைக்கப்பட்டுள்ளது:

**சட்டத்தின் பிரிவு 27 ”தனிப்பட்ட இழப்பீடுகள்”** என்பதனை வரையறுக்கிறது, இது ஒரு பயனுள்ள தீர்வுக்கான உரிமையை அங்கீகரித்தல் மற்றும் ஒரு தனிப்பட்ட இன்னலுக்குள்ளான நபருக்கான நன்மைகளை அங்கீகரித்தல் என்பவற்றினை நோக்கமாகக் கொண்டுள்ளது.

(அ) இன்னலுக்குள்ளான ஒருவருக்கு வழங்கப்படும் எந்தவொரு நன்மை, பணப்பரிமாற்றம் அல்லது பொருள்

(ஆ) நுண் நிதி மற்றும் சலுகைக் கடன்கள்

(இ) கல்வித் திட்டங்கள், பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள்

(ஈ) நிர்வாக உதவி, மற்றும் இன்னலுக்குள்ளான ஒருவருக்கு வழங்கப்படும் உள-சமூக ஆதரவு உள்ளிட்ட நலன்புரி சேவைகள்

(உ)நிலம் மற்றும் வீட்டுவசதி உள்ளிட்ட மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மற்றும்

(ஊ) இழப்பீடுகளுக்கான அலுவலகத்தினால் அடையாளம் காணப்பட்ட பிற பொருத்தமான நடவடிக்கைகள்.

**பிரிவு 27** என்பது **கூட்டு இழப்பீடுகளை** வரையறுக்கிறது, இது ஒரு பயனுள்ள தீர்வினைப் பெறுவதற்கான உரிமையினை அங்கீகரிப்பதற்கும், பாதிக்கப்பட்ட நபர்களின் சமூகங்கள் அல்லது குழுக்களுக்குமான நன்மைகளை உறுதிப்படுத்துவதற்குமானதாகும்.

(அ) நினைவுச் சின்னங்கள் உட்பட இறந்தவர்களை நினைவுகூருவதற்கான வழிமுறைகள்

(ஆ) உள்கட்டமைப்பு சார்ந்த அபிவிருத்தி

(இ) கல்வித் திட்டங்கள், பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள்

(ஈ) சமூக மேம்பாட்டு திட்டங்கள் அல்லது சேவைகள் மற்றும்

(உ) பாதிக்கப்பட்ட சமூகங்களுடன் கலந்தாலோசிப்பதனூடாக இழப்பீடுகளுக்கான அலுவலகத்தினால் அடையாளம் காணப்பட்ட பிற பொருத்தமான திட்டங்கள்.

சாராம்சத்தில், கூட்டு இழப்பீடுகள் ஒரு குழு, சமூகம், மக்கள் தொகை, கிராமம், மாவட்டம், பிராந்தியத்திற்கு நன்மைபயப்பதனூடாகத் தனிப்பட்ட நன்மைகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. கூட்டு இழப்பீடுகள் பல நபர்களுக்குக் கூட்டாகப் பயனளிக்கின்றன. இத்தகைய நிவாரண நடவடிக்கைகள் அடிப்படைத் தேவைகள் சார்ந்த சேவைகளையும் செய்கின்றன அத்துடன் மோதலுக்குப் பின்னரான அமைதியான சமூகங்களைக் கட்டியெழுப்புதல் என்கின்ற நீண்டகால நோக்கத்திற்கும் பங்களிக்கின்றன.

கூட்டு தீர்வுகளின் சிறப்பியல்பு என்னவென்றால், அவை மேற் குறிப்பட்ட ஒவ்வொரு தகுதியான பாதிக்கப்பட்ட நபர்களையும் சென்றடைவதாகும்.

இழப்பீடுகளுக்கான அலுவலகமானது கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களை வகுப்பது தொடர்பில் பின்பற்ற வேண்டிய சில வழிமுறைகள் கொள்கைகள் என்பவற்றினை இழப்பீட்டுச் சட்டமானது வகுக்கிறது.

**பிரிவு 2 (1) (இ)** பாகுபாடு காட்டாத கொள்கைகளை பின்பற்ற வேண்டும், பாதிக்கப்பட்டோரை மையப்படுத்தல் மற்றும் நேர்மை ஆகிய கொள்கைகளைக் கடைப்பிடித்தல் வேண்டும், மேலும் பெண்கள், குழந்தைகள் மற்றும் அங்கவீனமுற்றோரின் சிறப்புத் தேவைகள் குறித்து உரிய கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

**பிரிவு 12 (1) (ஈ)** கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களை வகுப்பதில் கருத்தில் கொள்ள வேண்டிய பின்வரும் காரணிகளை பட்டியலிடுகிறது:

(i) இன்னலுக்குள்ளான நபரின் உரிமைகளை மீறுவதன் தீவிரம்

(ii) இன்னலுக்குள்ளான நபர்களுக்கு இது போன்ற மீறல்களினால் ஏற்பட்ட தொடர்ச்சியான உடல், உளவியல் மற்றும் பொருளாதார தாக்கம் உள்ளிட்ட தாக்கங்கள்.

(iii) பெண்கள், குழந்தைகள் மற்றும் அங்கவீனமுற்றோர் உட்பட பாதிக்கப்படக்கூடிய வேதனைக்குள்ளானவர்களுக்குச் சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் அவசியம்

(iv) கேள்வி எழுப்புவதற்கான உரிமையை மீறுவதற்கு அமைவாக வேதனைக்குள்ளான நபர்களால் ஏற்கனவே பெறப்பட்ட இழப்பீடுகளுக்கு கணக்குக் கூற வேண்டிய அவசியம்

(v) இன்னலுக்குள்ளான நபர்களின் சிறந்த நலன்களைக் கருத்திற் கொண்டு பண இழப்பீடுகளை வழங்குவது தொடர்பில் வளங்கள் கிடைப்பது உட்பட கருத்தில் கொள்ள வேண்டிய காரணிகளாக, மொத்த தொகை செலுத்துதல்கள் மற்றும் தடுமாறிய கொடுப்பனவுகளுக்கான பணம் செலுத்தப்படும் முறையினைத் தீர்மானித்தல் என்பனவும்

(vi) நிதிசாரா இழப்பீடுகளின் சரியான தன்மை

(vii) நிதி சார்ந்த தனிநபர் இழப்பீடுகளை வழங்குகையில், மிகவும் மோசமான குறைகளைக் கொண்ட இன்னலுக்குள்ளான நபர்களுக்கு இத்தகைய இழப்பீடுகளை கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியம்

(viii) இன்னலுக்குள்ளான நபர்களின் உரிமைகள் மீறப்பட்டிருக்கும்பட்சத்தில் அவ்வுரிமை மீறலின் தீவிரத்தன்மை, இன்னலுக்குள்ளான நபர்களினால் எதிர்கொள்ளப்படும் இன்னல்களின் சீரணிக்கமுடியாத தன்மை மற்றும் அவர்களுக்குக் கிடைக்கப்பெறும் வளங்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு நிதி சார் இழப்பீடுகளை வழங்குவதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டியது அவசியம்

(ix) இறந்தவர் அல்லது காணாமல்போன நபர் தொடர்பாகப் பல உறவினர்கள் உரிமை கோரும் பட்சத்தில் இழப்பீடுகளை விநியோகித்தல் குறித்த திட்டத்தினை வகுக்க வேண்டியது அவசியம்

**பிரிவு 12 (1) (உ)** கூட்டு இழப்பீடுகளை வழங்குவதில், பாகுபாடு காட்டாமையினை உறுதிசெய்வதுடன், நல்லிணக்கத்தை எளிதாக்குவதோடு இன்னலுக்குள்ளான அனைத்து நபர்களின் அனுபவங்களையும் உணர்வுரீதியாக அணுகுவதனை முக்கியமாகக் கருத்திற்கொள்ள வேண்டும்.

இழப்பீடுகளுக்கான அலுவலகத்தினால் வடிவமைக்கப்பட்ட மற்றும் அமைச்சரவையினால் அனுமதிக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களை வகுப்பதில், மேலே குறிப்பிடப்பட்டுள்ள சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்ட கொள்கை மூலங்கள் உள்ளடங்குகின்றன.

## <u>கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களை வடிவமைப்பதில் பின்பற்றப்பட்ட செயல்முறை</u>

கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களை வகுப்பதில், சட்டத்தின் 12 (1) (அ) பிரிவுகளின் அடிப்படையில், இழப்பீடுகளுக்கான அலுவலகானது, இன்னலுக்குள்ளான நபர்கள், இன்னலுக்குள்ளான நபர்களைக் குறிக்கும் நிறுவனங்கள் மற்றும் வேறு எந்த அதிகாரமுடைய தரப்புடனோ அல்லது அவர்களின் வாழ்க்கையை மீட்டெடுப்பதற்குமான மறுகட்டமைப்பதற்கும்

அவர்களின் தேவைகளை அறிந்து கொள்வதற்காகவும் நபர் அல்லது நபர்களைக் கொன்ட அமைப்புடன் பொருத்தமான ஆலோசனை முறைகளைக் கொண்டு ஆலோசித்தல் வேண்டும்.

அதற்கமைய, இழப்பீடுகளுக்கான அலுவலகம் பின்வரும் ஆலோசனைகளைக் மேற்கொண்டது:

அ) அடையாளம் காணப்பட்ட மாவட்டங்களில் இடம்பெற்ற பொது ஆலோசனைகள் :

சம்பந்தப்பட்ட மாவட்ட செயலகங்களின் உதவியுடன் பின்வரும் மாவட்டங்களில் பொது ஆலோசனைகள் நடத்தப்பட்டன.

| இல | மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | திகதி |
|---|---|---|---|
| 01 | மன்னார் | முசலி | 28/08/2019 |
| | | மடு | |
| 02 | கிளிநொச்சி | பளை | 26/09/2019 |
| | | பூனகரி | |
| 03 | முல்லைத்தீவு | புதுக்குடியிருப்பு | 27/09/2019 |
| | | கரைதுரைப்பற்று | |
| 04 | யாழ்ப்பாணம் | தெல்லிப்பளை | 09/12/2019 |
| | | வேலணை | |
| | | சாவகச்சேரி | 10/12/2019 |
| | | மருதங்கேணி | |
| 05 | மட்டக்களப்பு | மாவட்டத்தின் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளில் | 17/12/2019 |
| 06 | மாத்தறை | அகுரஸ்ஸ | 20/12/2019 |
| | | ஹக்மண | |
| 07 | அம்பாந்தோட்டை | அம்பாந்தோட்டை | 17/02/2020 |

குறிப்பிட்ட பகுதிகளின் மாவட்ட / பிரதேச செயலாளர்களின் உதவியுடன் இழப்பீடுகளுக்கான அலுவலகத்தால் ஆலோசனைகள் ஏற்பாடு செய்யப்பட்டன, மேலும் அவை குறித்த பிரதேசங்களில் நடத்தப்பட்டன.

கூட்டங்களில் குறித்த பகுதிகளில் வசிக்கும் ஏராளமான பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர், இவர்கள், சட்டத்தின் 27 வது பிரிவின் கீழ் அடையாளம் காணப்பட்ட சூழ்நிலைகளில் பாதிக்கப்பட்டுள்ளவர்களாவர், இதில் அரசாங்க பாதுகாப்புப் படைகளின் உறுப்பினர்கள், காவல்துறை மற்றும் அவர்களது குடும்பங்கள் உள்ளடங்குகின்றன. அவர்களின் முக்கியமாக வேண்டுகோள்களாக வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்பவும் மீட்டெடுக்கவும் சமூக-பொருளாதார ஆதரவினைக் கோருதல் என்பவை அமைந்தன.

பொது ஆலோசனைகளில் பங்கேற்பதற்காக அழைக்கப்பட்ட இன்னலுக்குள்ளான நபர்களின் வகைகள்:

- காணாமல் போனவர்களின் தாய்மார்கள் , மனைவிகள் மற்றும் பெண்கள் உள்ளிட்ட குடும்பத்திற்குத் தலைமை தாங்குகின்ற பெண்கள்.
- மோதல்கள், உள்நாட்டு இடையூறுகள் அல்லது அரசியல் அமைதியின்மை ஆகியவற்றினால் கணவர்கள் இறந்த பெண்கள்
- உள்நாட்டினுள் இடம்பெயர்ந்த அல்லது மீள்குடியேற்றப்பட்ட நபர்கள்.
- மோதலகள், உள்நாட்டு இடையூறுகள் அல்லது அரசியல் அமைதியின்மை ஆகியவற்றினால் காயமடைந்த நபர்கள்.
- மோதலகள், உள்நாட்டு இடையூறுகள் அல்லது அரசியல் அமைதியின்மை ஆகியவற்றினால் இறந்த நபர்களின் குடும்ப உறுப்பினர்கள்.
- ஓய்வு பெற்ற அல்லது அயங்கவீனமுற்ற அரச ஆயுதப்படைகள் மற்றும் காவற்துறையினர் அத்துடன் அவர்களது குடும்ப உறுப்பினர்கள்.
  இறந்த அல்லது காணாமல் போன அரசாங்க ஆயுதப்படை மற்றும் காவற்துறை உறுப்பினர்களின் குடும்பங்கள்.
- புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்துடன் மீளிணைக்கப்பட்ட முன்னால் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள்.
- அகதிகள்ாக இந்தியாவிற்குச் சென்று மீள நாடு திரும்பியவர்கள்.
- மோதலகள், உள்நாட்டு இடையூறுகள் அல்லது அரசியல் அமைதியின்மை ஆகியவற்றின் விளைவாக உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்ட நபர்கள்.
- மோதலகள், உள்நாட்டு இடையூறுகள் அல்லது அரசியல் அமைதியின்மை ஆகியவற்றின் போது சொத்துக்களை இழந்த நபர்கள் (அசையக்கூடிய மற்றும் அசையாத சொத்துக்கள்).

ஆ) இன்னலுக்குள்ளான நபர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிவில் சமூக அமைப்புகளுடன் கலந்தாலோசித்தல் - இந்த ஆலோசனை டிசம்பர் 3, 2019 அன்று நடைபெற்றது. நாடு முழுவதும் இருந்து வருகை தந்த பதின்மூன்று (13) அமைப்புகள் பங்கேற்றன.

இ) இடைக்கால நீதி மற்றும் நல்லிணக்கத்திற்காக முன்மொழியப்பட்ட வழிமுறைகள் குறித்து பொதுமக்களின் கருத்துகளையும் இது குறித்த அவர்களின் பார்வையினையும் அறிந்து கொள்ள 2016, ஜனவரியில் நியமிக்கப்பட்ட “ஆலோசனைகளுக்கான பணிக்குழுவுடனான” கலந்துரையாடல் இழப்பீட்டுச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்னரே நாடு முழுவதும் இன்னலுக்குள்ளான நபர்களுடன் அவர்கள் நடாத்திய பரந்த ஆலோசனைகளின் அடிப்படையில் இந்த பணிக்குழுவிடம் விரிவான தகவல்கள் இருந்தன, இழப்பீடுகளுக்கான அலுவலகமானது அப் பணிக்குழுவின் உறுப்பினர்களைச் சந்தித்து இன்னலுக்குள்ளான நபர்களின் சூழ்நிலைகள். தேவைகள் குறித்த மதிப்புமிக்க உள்ளீட்டைப் பெற்றுக்கொண்டது.

நவம்பர், 2016 இன் ஆலோசனை பணிக்குழுவின் இறுதி அறிக்கையும், 2011 நவம்பரில் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணையத்தின் அறிக்கையும் ஆராயப்பட்டன.
இந்த ஆலோசனைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அறிக்கைகளின் விளைவாக, இழப்பீடுகளுக்கான அலுவலகம் அதன் கொள்கைகளையும் வழிகாட்டல்களையும் வடிவமைத்தது.

# கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்கள்

நாட்டின் பல பிராந்தியங்களில் நடத்தப்பட்ட பொது ஆலோசனைகள், இன்னலுக்குள்ளான நபர்கள் அவர்கள் நாட்டின் வடக்கு, கிழக்கு, தெற்கு அல்லது மேற்கில் வசிப்பவர்களாக இருந்தாலும் சரி ஒரே மாதிரியான தேவைகளையே வெளிப்படுத்தின, இங்கு குறிப்பிடப்பட்டுள்ள சில அக்கறைகள் ஒட்டுமொத்தமாக பரந்த சமூகங்களுக்கு பொதுவானவை என்பதையும், இதன் விளைவாக, இழப்பீடாக வழங்கக்கூடியவை சமூகத்தில் பரந்த குழுவிற்குத் தேவைப்படுவதால் இன்னலுக்குள்ளான நபர்களில் அதிகரித்துவரும் பாதிப்பு மற்றும் அவர்களின் தேவைகளை முன்னுரிமைப்படுத்திக் கவனத்திற் கொள்ள வேண்டும், இது சட்டத்தால் வலுயுறுத்தப்படுகிறது.[5]

அரசாங்கமானது இன்னலுக்குள்ளான நபர்களுக்கு அவர்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கும் மீளெடுக்கவும் எவ்வாறான நிவாரண நடவடிக்கைகளையும் மற்றும் ஆதரவினையும் வழங்க வேண்டும் என்பதனைக் கருத்திற் கொண்டு, இதன் மூலம் வருங்கால சந்ததியினர் உட்பட அனைத்து இலங்கையர்களின் நல்வாழ்வையும் பாதுகாப்பையும் முன்னேற்றுவற்கா தேவையின் அடிப்படையில் வழங்கப்பட வேண்டிய பின்வரும் வகையான இழப்பீடுகளை உள்ளடக்கயிதாகக் கொள்கைகள் பரிந்துரைக்கப்படுகின்றன.

### i. வாழ்வாதார உதவிகள்

வாழ்வாதார உதவியினை உருவாக்குவது உடனடி தேவையாக அடையாளம் காணப்பட்டது. இதனை நடைமுறைப்படுத்த இயலுமானவரை பரந்த நடவடிக்கைகள் மற்றும் முன்முயற்சிகளைச் செயல்படுத்த வேண்டும், இது இன்னலுக்குள்ளான நபர்கள் அவர்களின் பொருளாதார வலுவூட்டல் மூலம் தங்கள் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கும் மீளெடுப்பதற்குமாக அர்த்தமுள்ளதொரு வழிமுறையாக உதவுகிறது. ஒருபுறம், இது இன்னருக்குள்ளான நபர்கள் தங்களது சுய மேம்பாட்டினைப் பெறுவதற்கு அதிகாரம் அளிக்கும், மறுபுறம், அரசாங்கத்தின் வாழ்வாதாரத்தை அவர்கள் சார்ந்திருப்பதனைத் தவிர்க்கும். இன்னலுக்குள்ளான நபர்களின் வாழ்வாதார ஆதரவுக்குப் பின்வரும் வகையான தலையீடுகள் பங்களிக்கின்றன:

- விவசாயிகளின் சமூகங்களுக்கு உதவுவதற்காக நீர்ப்பாசன ∴ விவசாய நடவடிக்கைகளுக்கு நீர் வழங்கல் தொடர்பில் அணுகுதல்.
- அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் ஏராளமான வறுமை ஒழிப்பு திட்டங்களுடன் இன்னலுக்குள்ளானவர்களை ஒருங்கிணைத்தல்.
- பாதிப்பிற்குள்ளான பிரதேசங்களில் வாழ்வாதார வழிகள் மற்றும் சுய தொழில் வாய்ப்புகளை உருவாக்குதல்.

### ii. நட்டஈட்டுக் கொடுப்பனவுகளும் நிதியுதவிகளும்

இழப்பீடு வழங்குவதன் மூலம் இன்னலுக்குள்ளான நபர்களை அவர்கள் முன்பு இருந்த நிலைக்கு மீட்டெடுக்கவேண்டிய அவசியமில்லை என்றாலும், அவர்களது அந்தஸ்தினை மீண்டும் நிலைநிறுத்த முடியும். இருப்பினும் சரியான நேரத்தில், போதுமான இழப்பீட்டினைப் பெறுவது அவர்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்ப உதவும் ஒரு முக்கிய அம்சமாகும். மற்றொரு முயற்சியாக

[5] பிரிவு 12 (1) (ஈ) (viii)

அமைவது அர்த்தமுள்ள சமூகப் பாதுகாப்பு அமைப்புகளை நிறுவுவதாகும். இன்னலுக்குள்ளான நபர்களின் தேவையின் அடிப்படையில் மாதாந்த சமூகப் பாதுகாப்புக் கட்டணத் திட்டங்களை நிறுவுதல், கடன் நிவாரணத்திற்கான ஆதரவினை வழங்குவதுடன் - கடன்களைத் தீர்க்க முடியாத இன்னலுக்குள்ளானவர்களுக்கு நிதிக் கடன் கட்டணங்களுக்கு முகம் கொடுப்பதற்கான உதவியினை வழங்குதல் அல்லது அவர்களின் கடனைத் தணிக்க நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளல் என்பன குறிப்பிடத்தக்க முன்னெடுப்புகளாகும். வளங்கள் கிடைக்கப்பெறும் தன்மையின்[6] அடிப்படையில் இழப்பீடுகளை வழங்க வேண்டியது அவசியமாகிறது. உயிர் இழப்புக்கான பணரீதியான இழப்பீடு மற்றும் உடல்ரீதியான இயலாமைகளுக்காக விகிதாசார அடிப்படையில் வழங்கப்படக்கூடிய தொகை என்பன அதிகபட்ச தொகையாக முன்னெடுக்கப்படவேண்டும். இது தொடர்பான பரிந்துரையானது வழிகாட்டுதல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### iii. காணி உரிமைகளை மறுசீரமைத்தல்

இலங்கை சூழலில் காணி உரிமைகளை மறுசீரமைப்பது முக்கியத்துவம் வாய்ந்தது. கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி, இன்னலுக்குள்ளானவர்களில் சிலர் காணி உரிமைகள் தொடர்பாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

(i) காணிகள் கையகப்படுத்தும் சட்டங்களின் கீழ் அரசால் சட்டபூர்வமாக கையகப்படுத்தப்பட்டதுடன் அவற்றிற்கான இழப்பீட்டினைப் பெறாதவர்கள்.

(ii) காணிகள் கையகப்படுத்தும் சட்டங்கள் தவிர வேறு பொது ∴ அரச நோக்கங்களுக்காக காணி கையகப்படுத்தப்பட்டவர்கள், அத்துடன் அவற்றிற்கான எந்தவிதமான இழப்பீடுகளையோ அல்லது மாற்று நிலத்தையோ பெறாதவர்கள்.

மேற்கூறிய சூழலில், காணிகள் சாத்தியமான இடங்களில், சரியான உரிமையாளர்களுக்கு விரைவாக விடுவித்தல், மற்றும் அவற்றை விடுவிக்க முடியாத சந்தர்ப்பத்தில் இழப்பீட்டினை விரைவாகச் செலுத்துதல் அல்லது சரியான உரிமையாளர்களுக்கு மாற்றுக் காணிகளை வழங்குதல் ஆகியவை சிக்கலைக் கணிசமானளவு குறைக்கக் கூடியன.
மோதல் அல்லது இடப்பெயர்வின் போது இழந்த ஆவணங்கள் தற்போது கவவசம் இல்லாமையினால், தங்கள் காணிகளை மீட்பதற்கான அல்லது இழப்பீட்டைப் பெறுவதற்கான முயற்சிகளில் அதிகாரபூர்வமான சிக்கல்களைச் சந்தித்த சில இன்னலுக்குள்ளான நபர்கள் எழுப்பியுள்ள கவலைகளுக்குப் பதிலளிப்பதது தொடர்பில் பிரதேச செயலாளர்களின் தலையீடானது இன்றியமையாததாகும்.

இத்தகைய இன்னலுக்குள்ளானவர்களின் காணியுரிமையினைக் காணிப் பதிவேட்டில் பராமரிக்கப்படும் ஆவணங்களைப் பயன்படுத்தி நிறுவுவ உதவமுடியும். நிலப் பதிவேட்டில் ஆவணங்கள் கிடைக்கப்பெறாதவிடத்து, காணியின் உரிமையை நிறுவுவதற்கான எளிமைப்படுத்தப்பட்ட வழிமுறையினைக் கருத்திற் கொள்ளலாம். காணி கையகப்படுத்தும் சட்டங்களின் கீழ் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு வழங்க வேண்டிய இழப்பீட்டை விரைவாகப் பெற்றுத்தருவது தொடர்பாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் வழங்கப்படும் உதவயானது இந்த பிரச்சினைகளை விரைவாக தீர்க்க வகைசெய்யும்.

---

6 பிரிவு 12(1)(ஈ)(v)

காணி மறுசீரமைப்பை ஒரு வகையான இழப்பீடாக ஒருங்கிணைப்பதன் மூலம், வறுமை மற்றும் வாய்ப்பின்மை தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும். நிலம் இன்மை, வளங்கள் சார்ந்த உரிமைகள் தொடர்பாக இன்னலுக்குள்ளான நபர்கள், குறிப்பாகப் பெண்களுக்கு உருவாகும் பிரச்சினைகளுக்கு இது ஒரு சிறந்த தீர்வாகும்.

### iv. வீட்டுவசதியினை வழங்குதல்

வடக்கு மற்றும் கிழக்கில் இடம்பெற்ற பொது ஆலோசனைகளின் போது இன்னலுக்குள்ளான நபர்களின் வாழ்க்கை இயல்புநிலையை மீட்டெடுப்பதற்கான தடையாக அடையாளம் காணப்பட்ட விடயங்களில் வீடுகள் இன்மை முக்கியமாகக் காணப்பட்டது. அத்தகைய இன்னலுக்குள்ளானவர்களில் மூன்று பிரிவுகள் காணப்பட்டன:

1) எந்தவொருவிதமான அசையாச் சொத்தினையும் கொண்டிராதவர்கள்

2) காணி உள்ளவர்கள் ஆனால் அதில் ஒரு வீட்டினை அமைக்கப் போதுமான நிதி இல்லாதவர்கள்.

3) சொந்த வீடுகளைக் கட்டுவதற்கு அரசாங்கத்தால் ஓரளவு நிதி உதவி வழங்கப்பட்டவர்கள், ஆனால் அவ்வாறு வழங்கப்பட்ட நிதியானது கட்டடத்தினைப் பூர்த்திசெய்யப் போதுமானதாக இல்லை. அனைவருக்கும் தங்குமிடம் வழங்கும் அரசாங்கத்தின் கொள்கையைத் தொடர்ந்தால், அந் நடவடிக்கையானது போதுமான வீடுகள் இல்லாத இன்னலுக்குள்ளானவர்களுக்குப் பயனளிக்கும்.

தேவையான நிவாரண நடவடிக்கைகளாக, அரசாங்கத்தினால் வீடுகளைக் கட்டியெழுப்புதல் அல்லது புனரமைத்தல் அல்லது பாதிக்கப்பட்ட நபர்களுக்குச் சொந்த வீடுகளை கட்டுவதற்கு அர்த்தமுள்ள நிதி உதவயினை வழங்குதல் அல்லது இடம்பெயர்ந்தவர்களுக்கு புதிய வீடுகளை வழங்குதல் என்பன அமையும். இந்தச் சூழலில் ‘‘அர்த்தமுள்ள நிதி உதவி” என்பது பயனாளிகளின் வாழ்க்கைத் தரம் மற்றும் அவர்களின் புவியியல் சார்ந்த இருப்பிடங்களின் தேவைகள் ஆகியவற்றின் அடிப்படையில் போதுமான தங்குமிடத்தினைப் பெறுவதற்கு உதவுவதாகும்.

### v. சமூக உட்கட்டமைப்பின் அபிவிருத்தி.

சில உட்புறக் குடியிருப்புகளில் சமூக உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் இல்லாமை இழப்பீட்டுத் திட்டத்தில் மேலும் கவனிக்கப்பட வேண்டிய ஒரு பகுதியாகும். பாதுகாப்பான வீதிகள், பாலங்கள், குடிநீர், சுகாதார வசதிகள், பொதுப் போக்குவரத்து, மருத்துவமனைகள், சுகாதார நிலையங்கள் மற்றும் பாடசாலைகள் போன்றவை. குறைவாக் காணப்படுகின்ற, இன்னலுக்குள்ளான நபர்கள் எண்ணிக்கையில் அதிகமாக வசிக்கின்ற பிரதேசங்களை நோக்கியதான இலக்குடன் கூடிய ஆதரவும், உதவியும் தேவைப்படுகின்றன.

மேற்கூறிய சூழ்நிலைகளில், சமூக உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளை வழங்குவதற்கான முன்முயற்சிகளை இழப்பீட்டுத் திட்டத்தில் சேர்ப்பது, வீதிகள், பாலங்கள், குடிநீர், கிணறுகள், பொது பயன்பாடுட்டுக்கான விடயங்கள், சமூக மையங்கள், பொதுப் போக்குவரத்து, மருத்துவமனைகள் அல்லது சுகாதார நிலையங்கள், பாடசாலைகள் என்பன குறைந்த அளவில் காணப்படும் உட்புறக் கிராமப்புற குடியிருப்புகளுக்கான பிற அடிப்படை வசதிகள் போன்றவை, இன்னலுக்குள்ளான நபர்களுக்கு அவர்களின் வாழ்க்கையை மீளெடுப்பதற்கும் மீள உருவாக்குவதற்கும் பெரிதும் உதவும்.

### vi. நிர்வாகம் சார்ந்த நிவாரணம்.

பல இன்னலுக்குள்ளானவர்கள் மோதல் அல்லது இடப்பெயர்வின் போது தங்களது பெறுமதிமிக்க ஆவணங்களை இழந்துவிட்டனர். எனவே, ஆவணப்படுத்தல் செயல்முறையை எளிதாக்கும் முறைமை அவசியமானதாகும்.

இன்னலுக்குள்ளான நபர்களின் தேவையான ஆவணங்களை சரியான நேரத்தில் பெறுவதங்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் உதவியானது தேவைப்படுகிறது, எடுத்துக்காட்டாக, காணப்படாமைக்கான சான்றிதழ்கள், இறப்புச் சான்றிதழ்கள், பிற அவசியமான நிர்வாக ஆவணங்கள், அத்துடன் தேர்தலற் பட்டியல்களில் பதிவு செய்வதற்கான உதவி, சொத்துக்களின் ஆவணங்களை ஒழுங்குபடுத்துதல், சாரதி அனுமதிப் பத்திரங்கள் மற்றும் தேசிய அடையாள அட்டைகளை பெறுவதற்கு வகைசெய்தல் என்பனன சிக்கல்களைக் கணிசமான அளவு குறைப்பதற்கு அவசியமானவையாகும்.

### vii. உள-சமூக ஆதரவு

ஒரு ஆரோக்கியமான மற்றும் அமைதியான தேசம் அடிப்படையில் உடல் மற்றும் உளரீதியில் ஆரோக்கியமான மக்களையே கொண்டிருக்கும், மற்றும் இதன் விளைவாகப் பல இன்னலுக்குள்ளான நபர்கள், ஒரு குறித்த வடிவிலான அதிர்ச்சியினை அனுபவித்தவர்கள், எனவே இவர்கள் உள-சமூக ஆதரவின் மூலம் ஆழ்ந்த உணர்ச்சித் தூய்மையினை அடைவதுடன், மூடுதலினையும் கண்டறிய அனுமதிக்கப்படல் வேண்டும்.

ஆதரவை அர்த்தமுள்ளதாக வழங்குவதற்காக, பெண்களுக்கு உள-சமூக ஆதரவை வழங்குவதில் பாலின உணர்திறனுடன், குறிப்பாக பாலியல் வன்முறை தொடர்பான பிரச்சினைகள் குறித்து அணுகுவது மதிப்புமிக்கதாக அமையும்.

உள-சமூக ஆதரவு தேவைப்படுபவர்களில் கூடிய சதவீதானோர், ஒப்பீட்டளவில் சிறிய வகையான உளவியல் சிக்கல்களால் பாதிக்கப்படுகிறார்கள் என்றே நிபுணர்களால் மதிப்பிடப்பட்டுள்ளது, அதேசமயம் குறைந்த எண்ணிக்கையிலான இன்னலுக்குள்ளானோர் சிக்கலான மன / உளவியல் நிலைமைகளால் பாதிக்கப்படலாம், இதற்கு உளவியலாளர்கள் / மனநல மருத்துவர்களால் மேற்கொள்ளப்படுகின்ற சிறப்பு ஆலோசனை அல்லது சிகிச்சை தேவைப்படுகிறது. இச் சூழலில், பல்வேறு வகையான தேவைகளைப் பொறுத்தவரை, முக்கியமான பல்வேறு தலையீடுகளை மதிப்பிடுவது அவசியமாகும், மேலும் செயல்படுத்தக்கூடிய பரிந்துரை முறையினை உருவாக்குவது அவசியமாகும், இதில் சாத்தியமான இடங்களில், சுகாதார அமைச்சு மற்றும் பிற அரச நிறுவனங்கள் மூலம் கிடைக்கும் அரசாங்க வளங்களும் அடங்கும் , அவற்றின் மூலம் உள-சமூக ஆதரவை விரிவாக்க முடியும். மனநோயுடன் தொடர்புடைய களங்கம் என்கின்ற எண்ணக்கரு , மன ஆரோக்கியம் மற்றும் உளவியல் ஆதரவு பற்றிய விழிப்புணர்வு இல்லாமை என்பன உள-சமூக ஆதரவு தேவைப்படுபவர்கள் அதனை ஒரு தேவையாக அடையாளம் காண முடியாமைக்கு வழிவகுக்கின்றது

எனவே, அத்தகைய ஆதரவிற்கான கோரிக்கைகளில் முற்றிலும் சார்ந்து இல்லாத ஒரு வழிமுறை தேவைப்படுகிறது. இச் சேவைகளின் நோக்கம் நிச்சயமாக அமைவது, இன்னலுக்குள்ளானவர்களுக்கு ஆலோசனை, சிகிச்சை மற்றும் இது போன்ற பிற ஆதரவை வழங்குவதாகும்.

**viii. மேம்பட்ட ஒற்றுமை, நல்லிணக்கம் மற்றும் வன்முறைகள் மீளநிகழாமைக்கான நடவடிக்கைகள்**

இழப்பீடுகளை வழங்குவது, இன்னலுக்குள்ளான நபர்களின் நிலையை மீட்டெடுக்க உதவுவது மட்டுமல்ல, ஆனால் மிக முக்கியமாக ஆழ்ந்த உணர்ச்சித் தூய்மையினை அடைவது ஒரு அத்தியாவசிய செயல்முறையைத் தொடங்குகிறது, இது இன்னலுக்குள்ளான நபர்கள் மூடுதலினை நோக்கிச் செல்ல உதவுகிறது, மேலும் சமூகங்களிடையே நம்பிக்கையை உருவாக்குகிறது. மன்னித்தல், தீர்மானம் மேற்கொள்ளல் மற்றும் இறுதியில் நல்லிணக்கத்திற்கு இது அவசியமாகிறது.

சட்டம் மீறப்பட்டு, அவருக்கு / அவளுக்கு ஏதேனும் ஒருவித தீங்கு ஏற்பட்டால், அரசு தலையிட்டு அத் தீங்கினைத் தீர்க்கும். அவர் / அவள் சட்டத்தால் பாதுகாக்கப்படுகிறார் என்பதை அது குடிமகனுக்கு சமிக்ஞை செய்கிறது. சாராம்சத்தில், அரசு தனது குடிமகனைப் பாதுகாக்க உறுதிபூண்டுள்ளது என்ற மிக பெறுமதியான செய்தியை இது தருகிறது.

தவறிழைத்தவர்கள் யார் என்பதைப் பொருட்படுத்தாமல், இழப்பீடுகளை வழங்குவதன் மூலம், தனது குடிமக்களைப் பாதுகாப்பதற்கான கடமையின் ஒரு பகுதியாக நிவாரணம் வழங்கும் பொறுப்பை அரசு ஏற்றுக்கொள்கிறது.

தனிப்பட்ட மற்றும் கூட்டு இன்னலுக்குள்ளான நபர்களின் தேவைகளை நிவர்த்தி செய்கின்ற அதேவேளை இழப்பீடுகளின் இறுதி நோக்கமாக அமைவது, நாட்டில் வன்முறை மீண்டும் நிகழாமையினை உறுதிசெய்து கொள்வதும், துண்டு துண்டான இலங்கை மக்களை ஒன்றிணைப்பதும் ஆகும். ஒன்றுபட்ட சமூகத்தை உருவாக்குவதற்கு பங்களிக்கும் சாத்தியமான தலையீடுகள் பின்வருமாறு:

(i) கல்வியியல் முறை சீர்திருத்தங்கள்: பல் இன, பல மதம் சார்ந்த பாடசாலை முறைகளை ஊக்குவித்தல். (பௌத்த, கிறிஸ்தவ, முஸ்லிம், இந்து பாடசாலைகளின் தற்போதைய அமைப்பு ஒரே மாதிரியான சமூகங்களை விருத்தி செய்கிறது, இது இலங்கை போன்றதொரு மாறுபட்ட, பல கலாச்சார, பல் இன, பல மத தேசத்திற்கு நன்கு பொருந்தாது

(ii) இனங்களுக்கும், மதங்களுக்குமிடையிலான கல்வியை மேம்படுத்துவதற்காகப் பாடசாலைப் பாடத்திட்டத்தை மாற்றுவது, இது சமூகங்கள் தம்மிடையே ஒருவருக்கொருவர் கற்றுக்கொள்ள அனுமதிக்கும், மற்றும் வகுப்புவாத நல்லிணக்கம் , சகவாழ்வின் மதிப்பு குறித்த பாடங்கள் பாடசாலைப் பாடத்திட்டங்களில் சேர்க்கப்படுதல், மதிப்புமிக்க பௌத்த கொள்கை - 'அவிஹிம்சா' (''எந்தவொரு உயிரினத்திற்கும் எத்தகைய துன்பத்தையும் ஏற்படுத்தாமை'') உட்பட அனைத்து மதப் பேராசான்களாலும் கற்பிக்கப்பட்ட மத விழுமியங்களை இளைஞர்களின் மனதில் புகுத்துவதற்கு ஊக்கமளித்தல்.

(iii) அனைத்து பாடசாலைகளிலும் மூன்று மொழிகளையும் கட்டாய பாடங்களாகப் பின்பற்றுதல்

(iv) நடைமுறையில், எந்தவொரு நபரும் ஓரங்கட்டப்பட்டதாக உணராத வகையில், மொழி உரிமைகளை அதிகாரப்பூர்வமாக அங்கீகரிப்பது

(v) பிராந்தியங்களுக்கு இடையிலான மாணவர் பரிமாற்ற திட்டங்களை உருவாக்குதல்

(vi) வகுப்புவாத நல்லிணக்கம், சகவாழ்வு மற்றும் "இலங்கை" எனும் அடையாளததினை மேம்படுத்துவதில் (மதம் அல்லது இனத்தின் அடிப்படையில் பிரிக்கப்பட்ட அடையாளங்களுக்கு மாறாக) அரச ஊடகங்கள் வழியாக நேர்மறையான விளம்பரங்களை அரசு வெளியிடுகிறது. (மற்றும் இயலுமிடத்து தனியார் ஊடகத்தினையும் இணைத்தல்) நாட்டின் பன்முகத்தன்மையைக் கொண்டாட வேண்டுமெனில், ,பிரிவினைவாத சொல்லாட்சியைப் பரப்புவதற்குப் பதிலாகத் தேசத்தினை மாற்றியமைக்க வேண்டியது இன்றியமையாதது

(vii) நிறுவனம் மற்றும் அதன் கட்டமைப்பிலான சீர்திருத்தங்கள்

(viii) மனித உரிமைகள் சார்ந்த பயிற்சிகள் மற்றும் பொதுச் சேவையில் மனித உரிமைகளின் தரங்களை மேம்படுத்துதல்

(ix) சட்ட சீர்திருத்தம் மற்றும் நீதிச் சுதந்திரத்தினைப் பலப்படுத்துதல்

(x) தற்போதுள்ள மத முக்கியத்துவம் வாய்ந்த மத அடையாளங்கள் மற்றும் இடங்களைப் பேணிப் பாதுகாத்தல்

(xi) சிங்கப்பூரின் இனவாத வாழ்க்கை அனுபவத்திலிருந்து ஒரு அனுபவத்தினை எடுத்துக்கொள்வது, அரசாங்கம் வீட்டு வளாகங்களை வழங்கும் போது, கலப்பு இன வாழ்க்கையினை உள்ளடக்கிய முறையில் வீட்டு அலகுகளை விநியோகித்தல், இது பிரிந்திருக்கும் சமூகங்களிடையே பரஸ்பர புரிந்துணர்வையும் நட்பையும் ஊக்குவிக்கும்

(xii) கிராமப்புற குடியேற்றங்கள் உட்பட பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்கட்டமைப்பை மேம்படுத்துதல், இதனால் இன்னலுக்குள்ளானவர்கள் அரசாங்கத்தின் அபிவிருத்திக்கான நிகழ்ச்சி நிரலில் சமமாக நடாத்தப்படுவார்கள்

(xiii) இன்னலுக்குள்ளானவர்களுக்குக் கல்வி, பயிற்சிகள் மற்றும் திறன் மேம்பாட்டு திட்டங்களை உருவாக்குதல்

(xiv) பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் சமூக மேம்பாட்டுத் திட்டங்கள் அல்லது சேவைகளை உருவாக்குதல்.

## <u>வழிகாட்டுதல்கள்</u>

பண இழப்பீடு வழங்குவது மற்றும் பிற நிவாரண நடவடிக்கைகளை வழங்குவது தொடர்பான எந்தவொரு தீர்மானமும் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கொள்கைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். குறிப்பாக, சட்டத்தின் பிரிவு 11 (1) (எ) விதிகளுக்கு இணங்க, வழங்கப்பட வேண்டிய இழப்பீடுகளைத் தீர்மானிப்பது தொடர்பில் பின்வரும் வழிகாட்டுதல்கள் உள்வாங்கப்படுவதற்காகப் பரிந்துரைக்கப்படுகின்றன:

### 1. பாதிக்கப்பட்டோரை மையமாகக் கொள்ளல்-

பாதிக்கப்பட்டவர்களை மையமாகக் கொண்ட இழப்பீட்டுக் கொள்கைகளை இச் சட்டம் விதிக்கிறது.[7] இது தனிப்பட்ட மற்றும் கூட்டு இழப்பீடுகளை வழங்குவதைக் குறிக்கும், இது இன்னலுக்குள்ளான நபர்களின் தேவைகளை அர்த்தமுள்ளதாக வழங்கும். பாதிக்கப்பட்டவர்களின் தேவைகள் பாதிக்கப்பட்டவர்களிலிருந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு, பிராந்தியத்திலிருந்து பிராந்தியத்திற்கு, சூழ்நிலையிலிருந்து சூழ்நிலைக்கு மாறுபட்டுக் காணப்படும். எனவே, நெகிழ்வான இழப்பீட்டுத் திட்டங்கள்

[7] பிரிவு 12(1)(இ)

பின்பற்றப்பட வேண்டும்,இன்னலுக்குள்ளானவர்களுக்குத் தனிப்பட்ட சூழ்நிலைகளின் அடிப்படையில் இழப்பீடுகள் வழங்கப்படும். அங்கு இழப்பீட்டுத் திட்டங்கள் நெகிழ்வானதாகவும், இன்னலுக்குள்ளான நபர்களின் தேவைகளின் அடிப்படையில் அகநிலை அளவுகோல்களைப் பின்பற்றுவதற்கு ஏற்றதாகவும் அமைதல் வேண்டும்.

**2. இழப்பீடுகள் வழங்கப்படக்கூடிய பாதிப்பின் தன்மை மற்றும் தீவிரத்தன்மை தொடர்பான அளவுகோல்கள் உட்பட, இன்னலுக்குள்ளான நபர்கள் இழப்பீடுகளைப் பெறுவதற்காக அவர்களுக்கு உரிய தகுதியினைத் தீர்மானிக்கும் அளவுகோல்கள். -**

இழப்பீடுகளுக்காக் கோருபவர் உண்மையாகவே தன்னுடைய உறவினரின் உயிர் இழப்பின் விளைவாக (சட்டத்தின் பிரிவு 27 இல் வரையறுக்கப்பட்டுள்ளபடி) இன்னலுக்குள்ளாகியுள்ளார் அல்லது சட்டத்தின் 27 வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலைகளிலின் போது நபரிற்கு ஏற்பட்ட காயம் அல்லது ஒரு குழுவாக சொத்து அல்லது மொத்தமான சேதத்தின் விளைவாக இழப்பினைச் சந்தித்தார் என்பதனை நிறுவுவது அவசியமான அளவுகோலாகும். இழப்புக்கான உண்மைத் தன்மையினைக் கொண்ட சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

சட்டத்தின் விதிகளின் கீழ், ஒரு நபருக்கு தீங்கு ∴ இழப்பு ∴ சேதத்தை ஏற்படுத்தியவர் யார் என்பதைப் பொருட்படுத்தாமல், ஒரு நபரை பாதிக்கப்பட்ட நபராகக் கருதமுடியும். மீறல்களின் சூழ்நிலைகள் குறித்து விசாரிக்க இழப்பீடுகளுக்கான அலுவலகத்திற்கு எந்த ஆணையும் வழங்கப்படவில்லை, இதன் விளைவாக, மீறலுக்குக் காரணமான நபரை அடையாளம் காண எந்தவொரு சட்டரீதியான அதிகாரமும் இல்லை. தனிப்பட்ட இழப்பீடுகளின் ஒதுக்கீட்டளவு மற்றும் இழப்பீட்டின் வடிவம் உள்ளிட்டவை பாதிப்புகளின் தன்மை, தீவிரத்தன்மை மற்றும் அதன் விளைவாக ஏற்படும் தீங்கின் விளைவாக இன்னலுக்குள்ளான நபர்கள் அடைந்துள்ள நிலை ஆகியவற்றின் அடிப்படையில் வேறுபட்டுக் காணப்படும்.

அதன்படி, தனிப்பட்ட இழப்பீடுகளை வழங்கும் போது, ஏற்பட்டுள்ள தீங்கு அல்லது சேதத்தின் விளைவான பின்வரும் காரணிகளைக் கருத்தில் கொள்ள வேண்டும்—

அ) குடும்ப உறுப்பினரின் மரணம், காணாமல் போனமை அல்லது உடல்ரீதியாக முடக்கப்பட்டமையின் விளைவாகத் தப்பிப்பிழைத்தவர்களின் நிதி நிலைமை:

ஆ) குடும்ப உறுப்பினரின் மரணம், காணாமல் போனமை அல்லது உடல்ரீதியாக முடக்கப்பட்டமையின் விளைவாக உயிர் பிழைத்த குடும்ப உறுப்பினர்களின் கல்வியினைத் தொடர்வதற்கான வளங்கள் எந்த அளவிற்கு பாதிக்கப்பட்டுள்ளன:

இ) ஏற்பட்ட சேதம் அல்லது தீங்கின் விளைவாக வாழ்வாதாரத்தின் மீது ஏற்பட்ட தாக்கம் மற்றும் பொருளாதார வலுவூட்டல் நடவடிக்கைகளுக்கு உதவி தேவைப்படுகின்றமை:

ஈ) ஏற்பட்டுள்ள உணர்வுரீதியான சேதத்தின் தீவிரத்தன்மை மற்றும் இயல்புநிலையை மீட்டெடுக்கத் தேவையான தலையீடுகள்:

உ) நபரொருவருக்குக்கு ஏற்பட்ட காயத்தின் தீவிரத்தன்மை மற்றும் அதன் விளைவாக அவர் உடல்ரீதியாக முடக்கப்பட்டுள்ள அளவு:

**3. இழப்பீடுகளின் வடிவம், மற்றும் பொருத்தமான இடங்களில், தகுதியான இன்னலுக்குள்ளான நபர்களுக்கு வழங்கப்படும் இழப்பீடுகளின் அளவு-**

இழப்பீட்டின் வடிவமானது கொள்கை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தலையீடுகளின் தன்மையில் அடிப்படையில் அமைந்திருக்கும், மேலும் இழப்பு ஒரு உறவினரின் மரணம், இன்னலுக்குள்ளான நபருக்கு ஏற்பட்டுள்ள காயம், அதன் விளைவாக உடல்ரீதியாக முடக்கப்பட்டுள்ள அளவு அல்லது சொத்து இழப்பு அல்லது சேதம். என்பவற்றைக் கருத்திற்கொள்வதன் மூலம் இழப்பீடுகளின் ஒதுக்கீட்டளவானது தீர்மானிக்கப்படும்.

சட்டத்தில் வழங்கப்பட்டுள்ளபடி, பண இழப்பீடுகளை வழங்குவதில், வளங்கள் கிடைக்கப்பெறும் தன்மையானது பரிசீலிக்கப்படும் மற்றும் இழப்பீடு ஒரு மொத்தத் தொகையாக அல்லது சிறியளவிலான கொடுப்பனவுகளின் வடிவத்தில் அமைந்திருக்க வேண்டுமா என்பது குறித்தும் தீர்மானிக்கப்படும். மிகவும் பணவகையினவாகவுள்ள தனியான இழப்புக் கான எதிரீடுகளை வழங்குவதில், அத்தகைய இழப்புக்கான எதிரீடுகள், மிகப் பாரதூரமான இன்னலைக் கொண்டுள்ள இன்னலுற்ற ஆட்களுக்கு மட்டுப்படுத்தப்படுவதற்கான தேவை ஒரு அளவுகோலாகக் காணப்படும். எல்லா நிகழ்வுகளிலும், இன்னலுக்குள்ளானவர்களின் சிறந்த நலன்களுக்காக வழிகாட்டுகின்றமையே குறிக்கோளாகும். நிவாரணத்தின் வடிவம் மற்றும் அளவைத் தீர்மானிப்பதில், ஒரு இன்னலுக்குள்ளான நபரினால் ஏற்கனவே பெறப்பட்ட அனைத்து நிவாரணங்களும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**4. இன்னலுக்குள்ளான நபர்களுக்கு நிதி சார்ந்த இழப்பீடுகளை வழங்குவதற்கான தகுதிகள்-**

இன்னலுக்குள்ளான அனைத்து நபர்களும் வளங்கள் கிடைக்கப்பெறும் தன்மைக்கு அமைய நிதி இழப்பீடுகளைப் பெறத் தகுதியுடையவர்கள். இது சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு கொள்கையாகும்.

கடந்த கால சம்பவங்கள் தொடர்பாக வழங்கப்பட்ட இழப்பீடுகளுக்கான ஒதுக்கீட்டளவினை வைத்து, இறப்பிற்காக அதிகபட்சமாக ரூபா. 1 மில்லியன், மற்றும் இயலாமையின் அளவினைக் குறிக்கும் மருத்துவச் சான்றிதழ்களின் அடிப்படையில் குறைபாடுகள் உள்ள விகிதாச்சாரத்திற்கான அதிகபட்சத் தொகையாக முழுமையான ஊனமுற்றோருக்கு மொத்தம் ரூபா. 500,000 என்பன. நாணயத்தின் மதிப்பின் அடிப்படையில் இந்த தொகைகள் அவ்வப்போது மதிப்பாய்வு செய்யப்படலாம்.

நிதி இழப்பீட்டைக் கருத்தில் கொண்டு, சில சந்தர்ப்பங்களில், தீங்கின் உடனடி விளைவுகளைச் சமாளித்திருந்தாலும் கூட, இன்னலுக்குள்ளானவர்கள் மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களாக இருக்க முடியும், நீண்ட கால மருத்துவ பராமரிப்பு தேவைப்படலாம், அல்லது அவர்கள் இனிவரும் காலங்களில் சம்பாதிக்க முடியாமல் போகலாம். வருமானம், அல்லது வீடுகளையும் உடமைகளையும் இழந்திருக்கூடும். சட்டத்தின் சட்டரீதியான விதிகளுக்கு இணங்க, "இன்னலுக்குள்ளானவர்களின் சிறந்த நலன்" கருத்தில் கொள்ள வேண்டிய முக்கிய அளவுகோலாகக் காணப்படும்.[8] எனவே, பொருத்தமான இடங்களில் வாழ்வாதார வழிகளைப் பின்தொடர்வதற்கு நிதி இழப்பீடுகள் கூடுதலாகப் பிற வகையான உதவிகளாக வழங்கப்படலாம். நிர்வாகத் தாமதங்கள் காரணமாகப் பணரீதியான இழப்பீடுகளை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ள சூழ்நிலைகளில், ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவுகோலின் அடிப்படையில் இன்னலுற்ற நபருக்கு நியாயமான கூடுதல் தொகை வழங்கப்படும்.

8 பிரிவு 12(1)(ஈ)(v)

## 5. அவசரகால இழப்பீடுகளுகளைப் பெறுவதற்கான பாதிக்கப்பட்ட நபர்களின் தகுதிகளுக்கான அளவுகோல்கள்-

அவசர மருத்துவ தேவைகள் உள்ள சந்தர்ப்பத்தில், அங்கு தப்பிப்பிழைப்பவர்கள் ஒரு அசாதாரண நிலையில் இருக்கிறார்கள் மற்றும் அவசரக் கடமைகளை நிறைவேற்ற நிதி ஆதாரங்களின் தேவைப்பாடுகள் உள்ளன, மேலும் நிவாரணம் கிடைக்கப்பெறாத சந்தர்ப்பத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மேலும் தீங்கு ஏற்படும் அபாயம் உள்ள சந்தர்ப்பங்களில் அவசர இழப்பீடுகள் குறித்து பரிசீலிக்கப்பட முடியும். குழந்தைகளைப் பொறுத்தவரையில், அதிர்ச்சி மற்றும் உணர்வுரீதியான தொந்தரவுகளைத் தவிர்ப்பதற்கு அவசர அடிப்படையில் நிவாரணம் வழங்கப்படும்.

## 6. இன்னலுக்குள்ளான நபர்களுக்கு பல்வேறு வகையான இழப்பீடுகளை வழங்க அல்லது வழங்க உதவக்கூடிய அமைப்புகள்-

இழப்பீடுகளுக்கான அலுவலகமானது எந்தவொரு அரச, அரசாங்க, மாகாண அல்லது உள்ளூர் அதிகாரசபைகள் அல்லது முகவர்கள் அல்லது அதன் எந்தவொரு நிறுவனங்களிடமிருந்து அல்லது வேறு எந்த நபர் அல்லது நபர்களிடமிருந்தோ அதன் நோக்கங்களை அடைவதற்குத் தேவையான உதவிகளைப் பெற முடியும் என்பதை இச் சட்டம்[9] அங்கீகரிக்கிறது.

அதன்படி, இழப்பீடுகளுக்கான அலுவலகம் அடையாளம் காணப்பட்ட தேவைகளைக் குறிப்பிடுவதோடு, குறைகளுக்குப் பதிலளிக்கும் நோக்கில் குறிப்பிட்ட விடயப் பகுதிக்கு பொறுப்பான அனைத்து அரச நிறுவனங்கள் - வரிசை அமைச்சுகள், அரச, மாகாண அல்லது உள்ளூராட்சி நிறுவனங்கள், திணைக்களங்கள் மற்றும் முகவர் நிலையங்கள், நிறுவனங்கள் என்பவற்றினது உதவியினை நாடும்.

இக் கொள்கையினை வகுப்பதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட கலந்தாய்வுகளின் அடிப்படையில், நிவாரணம் வழங்குவதில் பின்வரும் அரச நிறுவனங்கள் மிகவும் பொருத்தமானவையாகத் தோன்றுகின்றன - வீடுகள், காணிகள், வாழ்வாதார அபிவிருத்தி, குழந்தைகள் மற்றும் பெண்கள் விவகாரங்கள், வீதி அபிவிருத்தி, சமூக சேவைகள், முதியோர் பராமரிப்பு, சுகாதாரம், கல்வி, தொழில் பயிற்சி மற்றும் வறுமை ஒழிப்பு ஆகிய விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சுகள் அல்லது பிற அரசு நிறுவனங்கள். இன்னலுக்குள்ளான நபர்களின் தேவைகளை மதிப்பீடு செய்வதன் விளைவாக,

குறித்த மற்றும் பிற அரச நிறுவனங்களால் வழங்கப்படக்கூடிய இழப்பீடுகள் குறித்து பரிந்துரைகள் செய்யப்படும்.

கூடுதலாக, பால்நிலை தொடர்பான பிரச்சினைகள் மற்றும் வறுமை ஒழிப்பு திட்டங்களில் ஈடுபட்டுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் பொருத்தமான உதவிகளை வழங்க எதிர்பார்க்கப்படுகிறது.

## 7. இழப்பீடுகளுக்கான சரிபார்க்கப்பட்ட விண்ணப்பங்களுக்கு எந்த அளவுகோல்களின் அடிப்படையில் முன்னுரிமை அளிக்கப்படும்-

பாதிப்பினால் ஏற்பட்ட தீங்கின் தாக்கம், உதவியின் தேவைக்கான அவசரம் அல்லது உடனடித் தன்மை, இன்னலுக்குள்ளான நபர்களின் அவலத்தின் நிலை மற்றும் இன்னலுக்குள்ளான நபரின் பாதிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் தனிப்பட்ட இழப்பீடுகளை வழங்குவதில் முன்னுரிமை அளிக்கப்படும்.

[9] சட்டத்தின், பிரிவு 11(1)(t)

குறிப்பாக, சட்டத்தின் விதிகளின்படி[10], பெண்கள், குழந்தைகள் மற்றும் ஊனமுற்றோர் போன்ற பாதிக்கப்படக்கூடிய நபர்கள் தனிநபர் இழப்பீடு வழங்குவதில் முன்னுரிமை பெற வேண்டும்.

விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை அளிப்பதில், பின்வரும் காரணிகளைக் கருத்தில் கொள்ளலாம், மற்றவற்றுடன், -

அ) இழப்பீட்டினைக் கோருபவரின் முற்றிலுமான அசாதாரண சூழ்நிலைகளில் / அல்லது அவசரமாக உதவி தேவைப்டுமிடத்து:

ஆ) உரிமைகோருபவர் வறுமையின் குறைந்த மட்டத்தில் உள்ள போது மற்றும் தேவை உள்ள சந்தர்ப்பத்தில்

இ) உரிமைகோருபவருக்குப் போதுமான வருமானம் ஈட்டும் திறன் உள்ளது, ஆனால் அவரது பாதிப்புகளை ஏற்றுக்கொள்ளும் வழிமுறையாக ஈடுசெய்தல் அமைய வேண்டும்.

**8. நம்பகத்தன்மையை சரிபார்ப்பதற்கான அளவுகோல்கள் -**

சட்டரீதியாக இழப்பீடுகளுக்கான நிர்வாக முறையானது பாதிக்கப்பட்டவர்களை மையமாகக் கொண்டு அமைதல் வேண்டும் என்பதுடன், இன்னலுக்குள்ளான நபருக்கு இழப்பீடு வழங்குவதற்கான எளிதான அணுகுமுறையினை வழங்க வேண்டும் என்பதாகும்.

இச் சூழலில், அதிக எண்ணிக்கையிலான இன்னலுக்குள்ளானவர்கள் தனிப்பட்ட ஆவணங்கள் மற்றும் மீறல்களின் சான்றிதழ்களை இழந்துவிட்டனர் அல்லது தவறவிட்டுள்ளனர் அல்லது மோதல்கள் மற்றும் இடப்பெயர்வுகளின் போது எவற்றையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை என்பதைனை அங்கீகரிக்க வேண்டும். எனவே நிவாரணத்திற்கான தகுதியை அங்கீகரிப்பதில் நெகிழ்வான அணுகுமுறை பின்பற்றப்பட வேண்டியது அவசியம்.

ஆகையால், சட்டத்தின் உணர்வை நிலைநிறுத்தும் விதமாக, அதிகமான ஆவணங்களின் முலம் நடைமுறை தேவைகளுடனான செயல்முறைகளுக்கு அதிக சுமை ஏற்படாமல் பார்த்துக் கொள்ளப்படும்.

சரிபார்ப்பு செயல்முறை எளிமைப்படுத்தப்படும், விண்ணப்பதாரிக்குப் பரீட்சயமான மற்றும் அணுக எளிதானதாக அமையும், விண்ணப்பதாரர்களில் பெரும்பான்மையானவர்கள் கிராமப்புறங்களைச் சேர்ந்தவர்கள் என்பதை நினைவில் கொள்ளவேண்டும், அவர்களில் பலர் இவ்வுதவிகளைப் பெறுவதற்கு அதிகமான ஆவணங்கள் மற்றும் விசாரணைகள் சம்பந்தப்பட்ட முறையான நடைமுறைகளில் ஈடுபடுவதற்கான அறிவு, திறன் அல்லது நிதி ஆதாரங்களைக் கொண்டிருக்கவில்லை. நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதனை சோதனை நியாயமானதாக இருக்கும், அதாவது இழப்பீட்டுக்கான அலுவலகம் தகுதிக்கான நியாயமான மற்றும் நம்பகமான ஆதாரங்களை ஏற்றுக் கொள்ளும்.

**9. உயிரிழந்தோரை நினைவுகூருவதற்கான அளவுகோல்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் -**

இச் சட்டத்தின் கீழ் பரிசீலிக்கப்பட்ட நினைவுகூரலானது, இறந்தவர்களின் குடும்பங்கள் தமது அன்புக்குரியவர்களின் இறப்பினைக் குறித்து துக்கத்தினை அனுஷ்டிக்கவும், நினைவு கூருவதற்குமான

[10] சட்டத்தின், பிரிவு 12(1) (இ) மற்றும் (ஈ)

உணர்ச்சிபூர்வமான தேவையை நிவர்த்தி செய்வதுமாகும். இது அரசியல் கோஷங்கள் அல்லது ஆர்ப்பாட்டங்களை பகிரங்கமாக காட்சிப்படுத்தத்துவற்கு வழிவகுப்பதற்கானதல்ல.

இது கூட்டாகப் பாதிக்கப்பட்டவர்களுக்காக, சட்டத்தின் கீழ் சிந்திக்கப்படும் அர்ப்பணிப்பு ஆகும், உதாரணமாக உயிர்த்த ஞாயிறு தினத்தன்றைய தாக்குதல் போன்ற மோதலின் போது இழந்த அனைத்து உயிர்களுக்கும் ஒரு பூங்கா போன்ற பொது இடத்தை வேறுபாடு இல்லாமல் அர்ப்பணிப்பது அல்லது, வரலாற்றில் இருந்த இனரீதியான நல்லிணக்கத்தின் வரலாற்றை பதிவு செய்யும் பொருட்டு ஒரு அருங்காட்சியத்தை அமைத்தல் போன்றனவாகும். அதேவேளை எந்த விதத்திலும் பயங்கரவாதிகள், பிரிவினைவாதிகளை நினைவுகூரல் இதில் உள்ளடங்கவில்லை.

**10. இன்னலுக்குள்ளான நபர்களின் குறிப்பிட்ட குழுக்களின் சிறப்புத் தேவைகளை நிவர்த்தி செய்தல்-**

பாதிக்கப்பட்ட நபர்களின் குறிப்பிட்ட குழுக்களின் சிறப்புத் தேவைகள், அவர்களின் குறிப்பிட்ட சூழ்நிலைகளின் அடிப்படையில், பின்வரும் பாதிக்கப்பட்ட நபர்கள் அடங்கலாகக் குறிப்பிட்ட குழுக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான சிறப்பு இழப்பீடுகள் இழப்பீட்டுத் திட்டத்தில் அடங்குகின்றன:

அ) பெண்கள்

ஆ) சிறுவர்கள்

இ) முதியவர்கள்.

ஈ) அரசாங்க ஆயுதப்படை, காவல்துறை உறுப்பினர்கள் மற்றும் சிவில் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் உட்பட ஊனமுற்றோர்

உ) இடம்பெயர்ந்த நபர்கள்

ஊ) அரசாங்க ஆயுதப்படை, காவல்துறை, சிவில் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் உட்பட இறந்த / காணாமல் போன நபர்களினது குடும்பங்கள்:

எ) பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்டவர்கள்

ஏ) முன்னாள் சிறுவர் போராளிகள் உட்பட புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் விடுதலைப் புலிகளின் போராளிகள்.